திருவண்ணாமலை அருணை மருத்துவ கல்லூரியில் 600 அதிநவீன படுக்கை வசதிகளுடன் பல்நோக்கு மருத்துவமனையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அருகில் அமைச்சர்கள் எ.வ.வேலு, துரைமுருகன், பொன்முடி, கே.என்.நேரு, டி.ஆர்.பாலு எம்.பி., மருத்துவமனை துணை தலைவர் எ.வ.குமரன், மருத்துவ இயக்குனர் டாக்டர் எ.வ.வே.கம்பன் உள்பட பலர் உள்ளனர்.

திருவண்ணாமலை

அருணை மருத்துவக் கல்லூரியில் 600 அதிநவீன படுக்கை வசதிகளுடன் பல்நோக்கு மருத்துவமனை

மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

திருவண்ணாமலை,அக்.23– திருவண்ணாமலை அருணை மருத்துவ கல்லூரியில் 600 அதிநவீன படுக்கை வசதிகளுடன் பல்நோக்கு மருத்துவமனையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

அதிநவீன மருத்துவ சிகிச்சைகள் பெற திருவண்ணாமலை மக்கள் மிகப் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகக் கூடாது என்ற பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவின் மகத்தான நோக்கத்தின் அடிப்படையில் திருவண்ணாமலையில் அருணை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தொடங்கப்பட்டு மாபெரும் மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் உலகத் தரத்தில் உயிர் காக்கும் பல்வேறு உயர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றது. அதிநவீன தொழில்நுட்ப வசதிகள் கூடிய 1000க்கும் அதிகமான படுக்கை வசதிகளுடன் பல்நோக்கு மருத்துவ சிகிச்சைகள் இங்கு அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் 24 மணி நேரமும் இயங்கும் அவசர சிகிச்சைப் பிரிவில் இதயம் சம்பந்தப்பட்ட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. 14 ஆபரேஷன் தியேட்டர்களில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்குமான அதிநவீன உயிர்காக்கும் உயர்சிகிச்சைகள் உலகத்தரத்துடன் குறைந்த கட்டணத்தில் இங்கு அளிக்கப்படுகின்றது.

இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, இதய பைபாஸ் அறுவை சிகிச்சை, இதய துளை அறுவை சிகிச்சை, நுரையீரல் அறுவை சிகிச்சை என ஆரோக்கியமான வாழ்விற்கு தேவையான அனைத்து சிகிச்சைகளும் அளிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் அருணை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் கூடுதலாக 600 அதிநவீன படுக்கை வசதி கொண்ட பல்நோக்கு மருத்துவமனை திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

விழாவிற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமை தாங்கினார். அருணை மருத்துவ கல்லூரி துணைத்தலைவர் எ.வ.குமரன், மருத்துவ கல்லூரி இயக்குனர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைச்சர்கள் துரைமுருகன், டி.ஆர்.பாலு, பொன்முடி, கே.என்.நேரு, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி ஆகியோர் வாழ்த்தி பேசினர். கல்லூரி முதல்வர் டாக்டர் டி.குணசிங் வரவேற்றார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கருணாநிதியின் வெண்கல சிலையை திறந்து வைத்தார்.

கையடக்க மடிக்கணினி

தொடர்ந்து 600 அதிநவீன படுக்கை வசதி கொண்ட பல்நோக்கு மருத்துவமனையை ரிப்பன் வெட்டி குத்து விளக்கேற்றி திறந்து வைத்தார். பின்னர் பல்நோக்கு மருத்துவமனை வளாகத்தையும், அதில் அமைக்கப்பட்டு உள்ள அதி நவீன படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ உபகரணங்களையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கையடக்க மடிக்கணினியை வழங்கினார்.

விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மருத்துவக் கல்லூரி துணைத் தலைவர் எ.வ.குமரன், மருத்துவ இயக்குனர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் நினைவுப் பரிசு வழங்கினர். விழாவில் மருத்துவக்கல்லூரி கண்காணிப்பாளர் குப்புராஜ், கல்லூரி மனித வள மேம்பாட்டு அதிகாரி சேஷாத்திரி உள்பட மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருவண்ணாமலையில் நடைபெற்ற நகரச் செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் மற்றும் நகர மன்றத் தலைவர் நிர்மலா வேல்மாறன் தம்பதியரின் மகள் வே.காமினி – எஸ்.ரகுநாத் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், மணமக்களின் குடும்பத்தினர் உடன் உள்ளனர்.

மேட்டுப்பாளையம் முருகையன் பரிசல்துறை பகுதியில்

பில்லூர் கூட்டுக் குடிநீர் திட்ட கட்டுமான பணி: தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா நேரில் ஆய்வு

கோவை, அக்.24– கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், நெல்லித்துறை ஊராட்சி, முருகையன் பரிசல்துறை பகுதியில் பில்லூர் கூட்டுக்குடிநீர் திட்டம்–3, ரூ.134 கோடி மதிப்பீட்டில் தலைமை நீரேற்றும் நிலையம் கட்டுமான பணிகளையும், பவானி ஆற்றில் அமைக்கப்பட்டுவரும் திருப்பூர் மாநகராட்சியின் நான்காவது கூட்டுகுடிநீர்; திட்ட நீரேற்று நிலை தடுப்பணை கட்டுமான பணி, கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்பட்ட குழாய் மற்றும் நீர்பின்னேற்றம் தடுப்பு கட்டுப்பாட்டு குழாய் அமைக்கும் பணிகளையும் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், குடிநீர் வடிகால் வாரிய மண்டல தலைமை பொறியாளர் செல்லமுத்து, மண்டல இயக்குநர்(நகராட்சி நிர்வாகம்) மா.இளங்கோவன், மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்றத் தலைவர் மெஹரிபாபர்வின் அசரப் அலி, துணைத் தலைவர் அருள்வடிவு முனுசாமி, மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையாளர் இரா.அமுதா ஆகியோர் உடனிருந்தனர்.

மக்கள் தொகையை கருதி திட்டம்

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு குடிநீர் ஆதாரமாக விளங்கும் பில்லூர் அணையிலிருந்து குடிநீர் வழங்க பில்லூர் – 3 திட்டம் 2035ம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சியிலுள்ள மக்கள் தொகையை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.779 கோடி மதிப்பில் மேட்டுப்பாளையம், நெல்லித்துறை ஊராட்சி, முருகையன் திட்டம் பரிசல்துறை. மருதூர் ஊராட்சி. தண்டிப்பெருமாள்புரம் மற்றும் கட்டன்மலை ஆகிய இடங்களில் கட்டுமான பணிகள் மற்றும் குடிநீர் குழாய் பதித்தல் போன்ற பணிகள் நடைபெற்றுவருகிறது.

மேட்டுப்பாளையம் வட்டம், நெல்லித்துறை ஊராட்சி, முருகையன் பரிசல்துறை பகுதியில் ரூ.134 கோடி மதிப்பீட்டில் தலைமை நீரேற்று நிலையம் கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆய்வுமேற்கொண்டு, பணிகளை தரமாகவும், விரைவாகவும் செய்து முடிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் திருப்பூர் மாநகராட்சியின் நான்காவது கூட்டுகுடிநீர் திட்ட நீரேற்று நிலைய தடுப்பணை கட்டுமான பணி,கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்பட்ட குழாய் மற்றும் நீர்பின்னேற்றம் தடுப்பு கட்டுப்பாட்டு குழாய் அமைக்கும் பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக, மேட்டுப்பாளையம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள் மற்றும் நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள் எவ்வளவு கி.மீ தூரத்திற்கு நடைபெறுகிறது, எத்தனை குழாய்கள் பாதிக்கப்பட்டுள்ளன, பணிகள் எந்த அளவு முடிவுற்றுள்ளன, மீதமுள்ள பணிகள் என்ன என்ன என்பது குறித்து சம்பந்தப்பட்டத் துறை அலுவலர்களிடம் கேட்டறிந்ததுடன், பாதாளச் சாக்கடை திட்டப்பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். நடைபெற்றுவரும் பணிகள், மேற்கொள்ளப்படவுள்ள திட்டப்பணிகள் குறித்த திட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அலுவலர்களுக்கு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா உத்தரவிட்டார்.

தேவரியம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் அஜய்குமார் தலைமையில் தோண்டாங்குளம் கிராமத்தில் 35,000 பனை விதைகள் நடும் விழா

காஞ்சீபுரம், அக்.24– காஞ்சீபுரம் அருகே வாலாஜாபாத் ஒன்றியம், தேவரியம்பாக்கம் ஊராட்சியில் உள்ள தோண்டாங்குளம் கிராமத்தில் 35,000 பனை விதைகள் நடும் விழா ஊராட்சி மன்றத் தலைவர் த. அஜய்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க. சுந்தர் கலந்து கொண்டு பனை விதைகளை வழங்கி தொடங்கி வைத்தார். பிறகு அவர் பேசியதாவது:

தேவரியம்பாக்கம் ஊராட்சி தலைவர், வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம மக்கள் அனைவரும் இணைந்து குறுங்காடுகளை சிறப்பாக வளர்த்து பராமரித்து வருவதற்கு பாரட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வூராட்சியில் அடிப்படைத் தேவைகளான சாலை வசதி, பேருந்து நிறுத்தம் முக்கியமாக அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு வரும் இவ்வூராட்சிக்கு தொடர்ந்து நாங்களும் முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறோம். மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் விடுபட்டுள்ள தகுதியான அனைவருக்கும் அதனை பெற்றுத் தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டப் பணிகள் மிக சிறப்பான அளவில் தேவரியம்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்று வருவதற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என கூறினார்.

இந்நிகழ்ச்சியில் வாலாஜாபாத் ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், துணைப் பெருங்குழுத் தலைவர் ப. சேகர், ஒன்றியக் குழு உறுப்பினர் அமளி சுதா முனுசாமி, சஞ்சய்காந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் ந. காஞ்சனா, ஊராட்சி மன்றத் தலைவர்கள் பூசிவாக்கம் லெனின்குமார், களியனூர் வடிவுக்கரசி ஆறுமுகம், துணைத்தலைவர் கோவிந்தராஜன், முன்னாள் தலைவர் எல்லப்பன், வார்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட கிராம பிரமுகர்கள் திரளாக பங்கேற்றனர்.

நொடித்தல் மற்றும் திவால்நிலை தொகுப்பு 2016–ன் கீழ்
விற்பனை அறிவிப்பு
மெசர்ஸ் எம்பீ சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட் – கலைப்பில் உள்ளது
(CIN: L24110AP1988PLC009291)
பதிவு அலுவலகம்: அய்யப்பரெட்டிபாலம், நாயுடுபேட்டை மண்டல், நெல்லூர் மாவட்டம், ஆந்திரபிரதேசம் – 524 126, இந்தியா
கலைப்பாளர் அலுவலகம்: அலுவலக எண்.58, 3வது குறுக்கு, வினாயக் நகர், ஹெப்பல், பெங்களூரு 560 024. மொபைல்: 9845002523 | 080 2390 2344
e-mail: plan@psri.in ; ip.empee@gmail.com

நொடித்தல் மற்றும் திவால்நிலை தொகுப்பு 2016–ன் கீழ் இ–ஏலம்
இ–ஏலத் தேதி மற்றும் நேரம் : வெள்ளிக்கிழமை, நவம்பர் 24, 2023 அன்று நண்பகல் 12.30 மணி முதல் மதியம் 2.30 மணி வரை
(ஒவ்வொன்றும் 10 நிமிட வரம்பில்லா நீட்டிப்புடன்)

கலைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மெசர்ஸ் எம்பீ சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட்டின் – கலைப்பில் உள்ளது (கார்ப்பரேட் கடனாளி) சொத்துகளை விற்பனை செய்ய கலைப்பாளரை நியமித்து, மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், அமராவதி அமர்வு 10.02.2023 அன்று உத்தரவிட்டது. நேஷனல் இ–கவர்னன்ஸ் சர்வீசஸ் லிமிடெட் (NeSL) மூலம் கீழ்கையொப்பமிடப்பட்டவர்களால் https://nesl.co.in/auction-notices-under-ibc/என்ற இணைய இணைப்பில் ''உள்ளது உள்ளபடி'', ''எங்கே உள்ளதோ அங்கேயே'', ''எந்தவித மாற்றமும் இல்லாமல்'' விற்பனை செய்யப்பட உள்ளது.

பிளாக்	ஆஸ்தி விவரங்கள்	ரிசர்வ் விலை (ரூ. கோடியில்)	டேவணித் தொகை டெபாசிட் (ரூ. கோடியில்)	அதிகரிப்பு மதிப்பு (ரூ. கோடியில்)
1	நிலம் (உத்தேசமாக 202 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது) மற்றும் கட்டிடத்துடன் முக்கூடல் கிராமம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு என்ற முகவரியில் உள்ள அம்பாசமுத்திரம் யூனிட் விற்பனை: தற்போது உள்ள நிலையில் நிறுவனத்தின் ஒரு பகுதியாக மேற்கண்ட சொத்துக்களைப் வங்குவதற்கான விற்பத்துடன் (மற்ற சொத்துக்களில் சில உரிமைகள் மற்றும் செயல்படக்கூடிய உரிமைகோரல் ஆகியவை அடங்கும், செயல்முறை குறிப்பில் இது குறித்து விவரங்கள் உள்ளன)	20.00	2.00	0.15

முக்கிய குறிப்புகள்:
1. பார்வையிடும் தேதி : நவம்பர் 09, 2023 முதல் நவம்பர் 18, 2023 வரை
2. இ–ஏலத்தின் மூலம் சொத்துக்கள் விற்பனையானது ''உள்ளது உள்ளபடி'', ''எங்கே உள்ளதோ அங்கேயே'', ''எந்தவித மாற்றமும் இல்லாமல்'' கண்டிப்பாக விற்பனை செய்யப்படும்.
3. இந்த அழைப்பு வருங்கால ஏலதாரர்களை அழைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் விற்பனையை செயல்படுத்துவதற்கு கலைப்பாளர் அல்லது நிறுவனத்தின் தரப்பில் எந்த விதமான பிணைப்புக் கடமையையும் உறுவாக்கவில்லை என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. கலைப்பு நடைமுறையின்படி தனது விருப்பத்திற்கேற்ப இ–ஏலத்தின் காலக்கெடு உட்பட ஏதேனும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நீட்டிக்க/ ஒத்திவைக்க/ரத்துசெய்ய மற்றும்/அல்லது மாற்றியமைக்க மற்றும் எந்தவொரு முன் அறிவிப்பும் இன்றி அல்லது ஏலத்தின் எந்த நிலையிலும் எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல் எந்த ஏலத்தையும் நிராகரிக்க கலைப்பாளருக்கு உரிமை உண்டு.
4. டேவணித் தொகையை சமர்ப்பித்தல் மற்றும் பங்கேற்பதற்கு முன் இ–ஏல செயல்முறை தகவல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து விதிமுறைகள், நிபந்தனைகளை அறிந்துகொள்வது கட்டாயமாகும். சொத்துகள் குறித்த விவரங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஆன்லைன் இ–ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஏலப் படிவம், தகுதி அளவுகோல்கள், ஏலதாரர்களின் உறுதிமொழி ஆவணம், டேவணித் தொகை டெபாசிட் ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான இ–ஏல செயல்முறை தகவல் ஆவணம் https://nesl.co.in/auction-notices-under-ibc/ and www.psri.in/escl/–ல் கிடைக்கும்.
5. பங்குதாரர்களின் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்து, கார்ப்பரேட் கடனாளியின் அம்பாசமுத்திரம் யூனிட்டை விற்க அல்லது அம்பாசமுத்திரம் யூனிட் உட்பட தற்போதுள்ள கார்ப்பரேட் கடனாளியின் நிறுவனத்தை முழுமையாக விற்பனை செய்யும் உரிமையை கலைப்பாளர் பெற்றுள்ளார். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள இ–ஏல செயல்முறை தகவல் ஆவணத்தைப் பார்க்கவும்.
6. ஏலம் தொடர்பான ஆவணங்கள் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களில் மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் அசல் பிரதிகள் கலைப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
7. ஏலதாரர்கள், தங்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன், சொத்து ஆவணம், உள்ளூர் வரிகள், மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணம், பராமரிப்பு கட்டணம், ஏதேனும் இருந்தால், தங்கள் சொந்த செலவில் சொத்தை ஆய்வு செய்து தங்களைத் திருப்திப்படுத்திக்கொள்ள வேண்டும்.
8. அனைத்து ஏல ஆவணங்களுடன் விருப்ப கருத்துரு, திரும்பப்பெறத்தக்க பங்கேற்பு வைப்புத் தொகையுடன் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 06/11/2023.
9. டேவணித் தொகை டெபாசிட்டை சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 22/11/2023 அன்று அல்லது அதற்கு முன் ஆகும்.
10. இ–ஏலத் தேதி மற்றும் நேரம் : 24.11.2023 அன்று நண்பகல் 12.30 மணி முதல் மதியம் 2.30 மணி வரை, ஒவ்வொன்றும் 10 நிமிட வரம்பில்லா நீட்டிப்புடன்.
11. உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லை உருவாக்க உதவி தேவைப்படும் டேவணித் தொகை டெபாசிட்டை செலுத்திய ஆர்வமுள்ள விண்ணப்பதாரர், கலைப்பாளர் அலுவலகத்தை 080 –2390 2344 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது ip.empee@gmail.com அல்லது plan@psri.in என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

பங்கஜ் ஜீவல்தவா
கலைப்பாளர் – எம்பீ சுகர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட்
தொடர்பு முகவரி : 58, 3வது குறுக்கு, வினாயக் நகர், ஹெப்பல், பெங்களூரு 560 024
Regn No: IBBI/IPA-001/IP-P00245/2017-18/10474
AFA valid upto 23/11/2023
தேதி : திங்கட்கிழமை, அக்டோபர் 23, 2023
இடம்: பெங்களூரு
Ph: 080 2390 2344| ip.empee@gmail.com
psri@live.com. | www.psri.in/escl/

தி.நகரில் முதல் ஸ்டீல் மேம்பாலம்: அடுத்த ஆண்டு ஜூன் மாதம் நிறைவடையும்

கமிஷனர் ராதாகிருஷ்ணன் தகவல்

சென்னை, அக். 24– சென்னை நகரின் முதல் ஸ்டீல் மேம்பால கட்டுமான பணிகள் தி.நகர் தெற்கு உஸ்மான் சாலையில் ஜூன் மாதம் நிறைவடையும் என்று மாநகராட்சி கமிஷனர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ரூ.131 கோடி செலவில் கட்டப்படும் 1.2 கி.மீ. ஸ்டீல் மேம்பாலம் தெற்கு உஸ்மான் சாலை, பர்கிட் சாலை மற்றும் மேட்லி சாலை சந்திப்பு, தெற்கு உஸ்மான் சாலை, தென் மேற்கு போக் சாலை, புதிய போக் சாலை சந்திப்பு மற்றும் சிஐடி நகர் வடக்கு சாலை, டி–ஜங்ஷன் ஆகிய பகுதிகளை இணைக்கிறது. இது அண்ணாசாலையில் இருந்து வரும் வாகன ஓட்டிகளுக்கு பனகல் பார்க் சந்திப்பை சில நிமிடங்களில் கடக்க உதவும்.

தற்போதுள்ள உஸ்மான் சாலை மேம்பாலம் முதல் பர்கிட் சாலை சந்திப்பு வரை ஏறி இறங்கும் பாதைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மேம்பாலம் 8.40 மீட்டர் அகலத்தில் இரண்டு வழிச்சாலையுடன் அமைக்கப்படும். இருபுறமும் 4 மீட்டர் அகல சர்வீஸ் சாலைகளும், 1.5 மீட்டர் அகல நடைபாதைகளும் இருக்கும்.

மார்ச் மாதம் தொடங்கப்பட்ட மேம்பாலத்தின் கட்டுமானத்தில் 177 தூண்கள் (மேலும் மற்றும் கீழ் வளைவு மற்றும் இணைப்பு உட்பட) மற்றும் தாங்கு தூண்களின் எண்ணிக்கை 53 ஆக இருக்கும்.சிஐடி நகர் மெயின் ரோட்டில் 140 மீ நீளமுள்ள மேல்–வளைவு, 120 மீ உஸ்மான் சாலையில் ஒரு மேல்வளைவு மற்றும் 100 மீ ஒரு கீழ்–வளைவு இரண்டு பாதைகளை உள்ளடக்கியது.

பர்கிட் சாலை சந்திப்பில் தற்போதுள்ள உஸ்மான் சாலை மேம்பாலத்தில் இருந்து மேல்–வளைவு மற்றும் கீழ்–சரிவுப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இந்த பணிகள் 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவடையும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சென்னை மாநகராட்சி கமிஷனர் ஜெ.ராதாகிருஷ்ணன் மேம்பாலத்தின் கட்டுமானப் பணியை ஆய்வு செய்து, பணியை விரைந்து முடிக்க ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தினார்.

சுமார் 40% பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், 2024ம் ஆண்டின் மத்தியில் (அதாவது ஜூன் மாதத்தில்) கட்டுமானப் பணிகள் முடிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

SHRIRAM Finance
ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)
CIN : L65191TN1979PLC007874
பதிவு அலுவலகம்: ஸ்ரீடவர்ஸ், மனை எண்.14ஏ, சவுத் பேஸ், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை 600 032
தமிழ்நாடு, இந்தியா Telephone +91 44 4852 4666, Fax : +91 44 4852 5666,
Website: www.shriramfinance.in, Email : customersupport@shriramfinance.in
Toll Free No.18001034959

பிக்செட் டெபாசிட்டுகளுக்கான வட்டி விகிதம் (24 அக்டோபர் 2023 முதல்)*

ஒட்டுமொத்தம் அல்லாத டெபாசிட்					ஒட்டுமொத்த டெபாசிட்		
காலம் (மாதங்கள்)	மாதங்கள் ஆண்டுக்கு %	காலாண்டு ஆண்டுக்கு %	அரையாண்டு ஆண்டுக்கு %	ஆண்டு ஆண்டுக்கு %	வட்டி % (மாதாந்திர அடிப்படையில் ஆண்டுக்கு)	பயனுள்ள முதிர்வு ஆண்டுக்கு%	ரூ.5,000/-க்கான முதிர்வு மதிப்பு
12	7.53	7.58	7.65	7.80	7.53	7.80	5,390
18	7.67	7.72	7.80	7.95	7.67	8.11	5,605
24	7.81	7.87	7.94	8.10	7.81	8.43	5,840
30	8.00	8.06	8.14	8.30	8.00	8.83	6,100
36	8.18	8.24	8.33	8.50	8.18	9.24	6,385
42	8.23	8.29	8.38	8.55	8.23	9.51	6,660
50	8.27	8.33	8.42	8.60	8.27	9.83	7,050
60	8.27	8.33	8.42	8.60	8.27	10.21	7,550

*மேலே கொடுக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள கூடுதல் வட்டி பொருந்தும்
- மூத்த குடிமக்களுக்கு ஆண்டுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படும். (டெபாசிட்/புதுப்பித்தல் தேதியன்று 60 ஆண்டுகள் பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்)
- டெபாசிட் முதிர்வு பெற்ற அனைத்து புதுப்பித்தல்களுக்கும் ஆண்டுக்கு 0.25% கூடுதல் வட்டி
- ஸ்ரீராம் குழும நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு ஆண்டுக்கு 0.10% கூடுதல் வட்டி வழங்கப்படும்.

வைப்புத்தொகையை ஏற்றுக்கொள்வது தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்கள்
★ மேலும் அறிவிப்பு வரும் வரை மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட வட்டி விகிதத்தில் புதிய டெபாசிட்டுகள் மற்றும் பிக்சட் டெபாசிட்டுகளை புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தை நிறுவனம் ஏற்றுக் கொள்ளும். இது 24 அக்டோபர், 2023 முதல் அமலுக்கு வரும் என்று உங்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.
★ மேலும், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் "2) திட்டம் மற்றும் காலம்" கீழே குறிப்பிட்டுள்ளபடி திருத்தப்பட்டுள்ளது:
"விண்ணப்பப் படிவத்தின் முதல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பல்வேறு காலக்கட்டங்களுக்கான ஒட்டுமொத்த மற்றும் ஒட்டுமொத்தம் அல்லாத டெபாசிட்களை நிறுவனம் ஏற்றுக்கொள்கிறது."
★ வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் இதர வங்கி சாரா நிறுவனங்கள் (விளம்பரம்) விதிகள், 1977இன் படி, 24 ஜூன், 2023 மற்றும் 19 அக்டோபர், 2023 அன்று 'பைனான்ஷியல் எக்ஸ்பிரஸ்' மற்றும் 'மக்கள் குரல்' ஆகிய பத்திரிக்கைகளில் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்ட சட்டரீதியான விளம்பரத்தின் கூடுதலாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது. இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் விண்ணப்ப படிவத்தில் அச்சிடப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பிக்சட் டெபாசிட் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு முன் அவற்றை கவனத்தில் கொள்ளவும்.
★ பிக்சட் டெபாசிட் திட்டத்தின் பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எந்தவித மாற்றமும் இல்லை.

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)
ஒப்பம்/–
Y.S. சக்கரவர்த்தி
நிர்வாக இயக்குனர் & தலைமை செயல் அதிகாரி
(DIN : 00052308)
இடம் : மும்பை
தேதி : அக்டோபர் 23, 2023